வி.பி.சிங் - ஒரு வணக்கக் குறிப்பு

'பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு' என்றவர் பாரதியார். யாருக்கும் தம் தாய்த் தேசத்தின் மீது தீரா வாஞ்சை இருப்பது இயல்பு. ஆனால் பாரத நாடு தொடர்பாக வெளியிலிருப்போர் எவ்வாறான சித்திரத் தைக் கொண்டுள்ளனர். மிக ஏழ்மையானா கல்வி யறிவற்றவர்களால் நிறைந்த ஊழல் மிகுந்த ஒரு நாடாகவே வெளியில் உள்ளோர் இந்தியாவைக் கருது கின்றனர். அதில் உண்மையில்லாமலும் இல்லை.

'கஞ்சிக்கும் வழியிலார் – அதன்

காரணம் இன்னதென்று அறிவுமிலார்'

என்பது இந்திய மக்கள் குறித்து பாரதியாரின் கருத்து. உணவும் கிடைக்கவில்லை அதற்கான காரணம் என்ன வென்றும் தெரியாத அறிவிலிகளாக இருக்கிறார்களே என்பது பாரதியார் வேதனை.

1947ல் இந்தியா சுதந்திரம் அடைகிறது. அதற்கும் ஒரு வருடத்திற்குப் பின்னர் சீனா, மக்கள் சீனமாக புரட்சியால் விடுவிக்கப்படுகின்றது. இப்போது சீனா எங்குள்ளது என்றும் இந்தியா எந்த இடத்தில் நிற்கின்றது என்றும் நம்மால் கணிக்க முடியும். இந்தியாவின் ஜனநாயகம் தான் அதற்குக் காரணமென்றால் அந்த ஜனநாயகம் தேவை தானா என்று சிலர் குரல் எழுப்பினால் அதற்கு என்ன பதில் கூற முடியும். இதற்கு யார் பொறுப்பு.

இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து நேரு சாஸ்திரி, இந்திரா, மொரார்ஜி, ராஜீவ், விபிசிங் சந்திர சேகர், நரசிம்மராவ், தேவகௌடா, வாஜ்பாய் ஆகியோர் பிரதம மந்திரிகளாக இருந்திருக்கின்றனர். இந்தியாவின் இந்த நிலமைக்கு இவர்களே முக்கிய பொறுப்பு என்று சொல்லலாம் என்றாலும் இவர்களில் ஒருவரை விலக்கி வெளியே கொண்டு வரலாம் என்பது எனது கருத்து. அவர் வி.பி.சிங்.

விஸ்வநாத் பிரதாப் சிங் என்கின்ற வி.பி சிங் இந்தியாவின் பிரதமராக வெறுமனே பதினொரு மாதங்களே பதவி வகித்தார். ஆனால் அந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் அவர் செய்தது பெரிது. அவர் செய்தவற்றுள் தலையாயது மண்டல் கொமிசன் பரிந்துரையை ஏற்று நடைமுறைப்படுத்தியது. அது பெரியாரின் கனவுகளில் ஒன்று என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

மண்டல் கொமிசன் பரிந்துரை என்றால் என்ன என்ற ஒரு கேள்வி எழுகிறது. அது இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்று சொல்லலாம். இன்னும் கொஞ்சம் விரிவாக விளக்கினால் தான் அதனைப் புரிய முடியும்.

இந்தியாவின் பெரும்பாலான அரச அதிகாரிகள் பிராமணர்களாகவே இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் அறிவில் சிறந்தவர்கள் என்பது அல்ல. சுதந்திர இந்தியாவின் வசதியும் வாய்ப்பும் வாய்க்காலும் பிராமணர்களுக்கே திறந்து விடப்படுகிறது. அதனால் எல்லா உயர் பதவிகளையும் அவர்களே கைப்பற்று கின்றார்கள் இதனால் ஏனைய சமூகங்கள் வஞ்சிக்கப் படுகின்றன. குறிப்பாக தலித் சமூகம் இதனால் பெரிதும் வஞ்சிக்கப்பட்டது.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று பெரியார் பெரிதும் வலியுறுத்தி வந்தார். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரும் கூட பல்லாண்டு காலமாக இதற்காகக் குரல் கொடுத்தார்கள். மண்டல் கொமிசன் இது தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரை செய்தது. அதனை வி.பி சிங் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் சட்டமாக்கினார்.

இதனை மேலும் விளக்குவதாக இருந்தால் ஒரு உதாரணம் சொல்ல வேண்டும். ஒரு மருத்துவக்கல்லூரி ஒரு வருடத்தில் நூறு மாணவர்களை அக்கல்லூரி மருத்துவத் துறைக் கல்விக்குச் சேர்த்துக் கொள்ளும். இதுவரை காலமும். நூறு மாணவர்களில் 90 மாணவர்களாவது பிராமணர்களாக இருந்தனர். ஆனால் விபி சிங் விதித்த சட்டத்தின் படி 100 மருத்துவ மாணவர் களில் 20 மாணவர்கள் தலித் மாணவர்களாக கட்டாயம் இருக்க வேண்டும். அவ்வாறு அனைத்து சாதீய மாணவர் களுக்கும் இடம் வழங்கப்பட்டது. இவ்வகையில் பிராமணர் களுக்கு 10 வீதமே ஒதுக்கப்பட்டது. (இங்கு சொல்லப் படும் கணக்குகள் மிகச் சரியானவை அல்ல. ஓர் உதாரணத்திற்காகச் சொல்கின்றேன்.)

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

இச்சட்டத்தை விபி சிங் அமுல்படுத்திய போது இந்தியா கொந்தளித்தது என்று சொல்லக் கூடாது. பிராமணர் கொந்தளித்தனர். சில பிராமணர் தீக்குளித்தனர். இந்தப் புரட்சிகரமான சட்டத்தை ராஜிவ் காந்தி, சந்திரசேகர் போன்ற அரசியலாளர்களும் விரும்பவில்லை நிர்ப்பந் தங்களும் இக்கட்டுகளும் ஒரு சேர 11 மாத காலத்தில் விபி சிங் தனது பதவியைத்துறந்தார். பதவிக்காகக் கொண்ட கொள்கையைக் கைவிட அவர் தயாராக இல்லை. இந்த இக்கட்டான காலங்களில் விபி சிங்குக்கு உற்ற தோழனாய் வி.பி சிங்கின் செயற்பாடுகளுக்கு மிக்க ஆதரவாள னாய் இருந்தவர் கலைஞர் கருணாநிதி அவர்களே (ஷங்கர் இயக்கிய ஜென்டில்மன் திரைப்படம் இந்த மண்டல் கொமிசன் பரிந்துரை தொடர்பாக ஒரு எதிர் நிலைப்பாடு எடுத்தது. அந்தத் திரைப்படத்தைப் பார்த்தால் புரியும்.)

வி.பி சிங் அவர்கள் ராஜீவ் காந்தியின் அரச நிர்வாகத் தில் ஓர் அமைச்சராக இருந்தவர். போபர்ஸ் பீரங்கி களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக ராஜீவ் காந்தி ஊழல் செய்துவிட்டார் என்று குற்றஞ்சாட்டியே வி.பி சிங் அவர்கள் கொங்கிரஸ் கட்சியிலிருந்தும் அமைச்சர் அவையிலிருந்தும் வெளியேறினார். தன் கொள்கையில் அந்தளவு உறுதியானவர் வி.பி சிங்.

ஈழத்தமிழர் நாம் வி.பி சிங் அவர்களை வேறு ஒன்றுக் காகவும் வணக்கம் செலுத்தி கௌரவிக்க வேண்டும். ராஜீவ் காந்தியால் அனுப்பப்பட்ட இந்திய அராஜகப்படை பல்லாயிரக்கணக்கில் ஈழத்தவர்களைக் கொன்று குவித்தது. வி.பி சிங் ஆட்சிக்கு வந்தவுடன் செய்த முதற்காரியம் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை திரும்ப அழைத்தது. அந்த வகையிலும் வி.பி சிங் எங்கள் மரியாதைக்கு உரியவர்.

ஈவேரா பெரியார் மீது தீவிரப்பற்றுக் கொண்டவர் வி.பி சிங். பெரியாரின் கொள்கைகளை முழுமனதாக ஏற்றுக் கொண்டவர். அவ்வாறு ஏற்றுக் கொண்டமையால் அவருக்குமறுபிறவிமீதுநம்பிக்கைகிடையாதுஎன்றாலும் சொன்னார்.'அடுத்த பிறவி என ஒன்று இருக்குமானால் நான் தமிழனாகப் பிறக்க விரும்புகிறேன்'. இக்கூற்று தமிழர் மீது வி.பிசிங்குக்கு இருந்த மரியாதையையே காட்டுகின்றது.

இந்தியாவின் மிகச் சிறந்த பிரதமரான வி.பி சிங் மறைவு இப்பொழுது நிகழ்ந்த மும்பைப் பயங்கரத்தில் மறைந்து போனது. ஆனால் அவ்வாறு மறையவோ மற க்கவோ முடியாதவர் வி.பி சிங் அவர்கள். அவருக்கு தமிழர் சார்பாக எம் வணக்கம்.

விருந்தினர் வந்தால்...

அப்பிள் muffin

தேவையானப் பொருட்கள்

அப்பிள் - 2, கோதுமை மா - 4 கப், மாஜரின் - ஒரு கப் , சீனி - ஒரு கப், ப்ரவுன் சீனி - 3/4 கப், முட்டை - 4, பால் - ஒரு கப், பேக்கிங் பவுடர் - 4 தேக்கரண்டி, உப்பு - ஒரு தேக்கரண்டி, வெனிலா எசன்ஸ் - 2 தேக்கரண்டி, கறுவாப்பட்டை தூள் - ஒரு மேசைக்கரண்டி,

செய்முறை

மாவுடன் உப்பு, பேக்கிங் பவுடர் மற்றும் கறுவாப்பட்டைத் தூளை சேர்த்து வைத்துக் கொள்ளவும். அவனை 350 பாகையில் சூடு செய்து வைத்துக் கொள்ளவும். அப்பிளை மேல் தோல் நீக்கி விட்டு நன்கு பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் இரு வகை சீனிகளுடன் மாஜரீனை போட்டு நன்கு 3 - 4 நிமிடங்கள் அடித்துக் கொள்ளவும். பின்னர் அதனுடன் முட்டைகளை உடைத்து ஊற்றி அடித்துக் கொள்ளவும். இப்பொழுது அதிக நேரம் அடிக்கத் தேவையில்லை.

அதன் பிறகு வெனிலா எசன்ஸை சேர்த்து இன்னும் சில நொடிகள் அடித்துக் கொள்ளவும்.பின்னர் மாக்கலவையை இரண்டாக பிரித்து அதில் ஒரு பங்கை முதலில் சேர்த்து அடிக்கவும்.

பிறகு அரை கப் பாலை சேர்த்து அடித்துக் கொண்டு அதனுடன் மீதமுள்ள மாக் கலவையை சேர்த்து அடித்துக் கொள்ளவும். கடைசியாக மீதமிருக்கும் பாலையும் ஊற்றி அடிக்கவும்.

இந்த கலவையுடன் பொடியாக நறுக்கி வைத்திருக்கும் அப்பிள் துண்டுகளை சேர்த்து கரண்டியால் கலந்து விடவும்.

மபின் கப் தட்டுகளில் பேப்பர் கப்புகளை வைத்து மபின் கலவையை முக்கால் பாகம் நிரப்பி வைக்கவும். பிறகு சூடு செய்து வைத்திருக்கும் அவனில் வைத்து பேக் செய்து எடுக்கவும்.

அப்பிள் மபின் தயார்.

புரோக்கோலி, வாழைக்காய் பிரட்டல்

தேவையானப் பொருட்கள்

புரொக்கோலி - 1, வாழைக்காய் - 1, பேபி கோர்ன் - 6, வெங்காயம் - 1, குடை மிளகாய் - 1, பச்சைமிளகாய் - 1, செத்தல் மிளகாய்- 1, இஞ்சி - சிறிய துண்டு, பூண்டு - 4 பல், மல்லி இலை - சிறிது, மிளகாய்தூள் - 1/2 தேக்கரண்டி, மல்லிதூள் - 2 தேக்கரண்டி, மிளகு தூள் - 3/4 தேக்கரண்டி, மசாலா தூள் - 1/2 தேக்கரண்டி, உப்பு - சிறிது, எண்ணெய் - 4 தேக்கரண்டி

செய்முறை

புரோக்கோலியை தனித்தனியாக பிரித்து எடுத்து சுடுத்தண்ணீரில் போட்டு வைக்கவும்.

வெங்காயம், குடைமிளகாயை நீளவாக்கில் வெட்டி வைத்துக் கொள்ளவும். பூண்டு, இஞ்சி, பச்சை மிளகாய் ஆகியவற்றை பொடியாக நறுக்கி வைக்கவும். பேபி கார்னை வட்டமாக வெட்டவும்.

வாழைக்காயை 5 , 6 துண்டுகளாக வெட்டி தண்ணீரில் சிறிது உப்பு சேர்த்து 7 நிமிடம் வேக விட்டு வெந்ததும் எடுத்து தோல் நீக்கிக் கொள்ளவும்.

சட்டியில் எண்ணெய் ஊற்றி சுட்டதும் சீரகம், செத்தல் மிளகாய் போட்டு தாளித்து அதில் வெட்டிய வெங்காயம் சேர்த்து வதக்கவும். அதன் பிறகு வெட்டிய பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு போட்டு வதக்கவும்.

பின்னர் பேபி கோர்ன், குடைமிளகாயை ஒவ்வொன்றாக சேர்த்து வதக்கி விட்டு அதனுடன் புரோக்கோலியை சேர்த்து 2 நிமிடம் வதக்கவும். வதக்கிய காய்களுடன் மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லித்தூள், உப்பு சேர்த்து வதக்கி, சிறிதளவு தண்ணீர் தெளித்து 10 நிமிடம் வேக விடவும்.

10 நிமிடம் கழித்து வேக வைத்து வெட்டிய வாழைக்காய், தக்காளி சேர்த்து 2 நிமிடம் வதக்கவும். கடைசியாக மசாலா தூள் மற்றும் மிளகு தூள் சேர்த்து நன்கு ஒரு முறை கிளறி விட்டு இறக்கி விடவும்.

சுவையான புரோக்கோலி வாழைக்காய் பிரட்டல் தயார்.

- நிசா